# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,669 — 1966 පෙබරවාරි 11 වැනි සිකුරාදා — 1966.2.11

14.669 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. .. | 27 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | 28 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நாணுவிதம் .. .. .. | 30 |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

ஆர். பீ. — வீ. 69/41

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், யாழ்ப்பாண மாவட்டத்து நெடுந்தீவு கிராமப் பிரதேசத்து கிராமச் சபைக்கு, அப்பிரதேசத்தில் அச்சட்டத்தின் கீழ் ஒரு நிலவரியை விதித்து அறவிடுதற்கு இந்த அறிவித்தல்வாயிலாக, அதிகாரமளிக்கின்றேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1966 ம் ஆண்டு ஜனவரி மீ 30 ந் உ.

2-508—11.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,669

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், யாழ்ப்பாண மாவட்டத்து நாரந்தனைக் கிராமப் பிரதேசத்து கிராமச் சபைக்கு, அப்பிரதேசத்தில் அச் சட்டத்தின் கீழ் ஒரு நிலவரியை விதித்து அறவிடுதற்கு, இந்த அறிவித்தல்வாயிலாக, அதிகாரமளிக்கின்றேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1966 ம் ஆண்டு ஜனவரி மீ 30 ந் உ.

2-507—11.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,669

---

### முக்கிய அறிவித்தல்

இத்தாற் சகலரின் கவனத்திற்கும் கொண்டு வருவது யாதெனில், உற்பத்திச் செலவு கூடியதன் காரணமாக **இலங்கை அரசாங்க வர்த்தமானி**யின் விளம்பரக் கட்டணங்களைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தற்போது நடைமுறையிலிருக்கும் ஒற்றைப்பந்தி அங்குலக் கட்டணம் ரூபா 10 ம் மேலதிக ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் ரூபா 10 ம் என்பதற்குப் பதில் **ஒரே கட்டணமாக ஒற்றைப்பந்தி அங்குலத்திற்கோ அன்றி அதன் பகுதிக்கோ ரூபா 15,** வியாபாரச் சின்னங்கள் தவிர்ந்த ஏனைய விளம்பரங்களுக்கு 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறவிடப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு பெப்புருவரி மீ 11 ந் உ.

**பேர்னட் டி சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

## கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டம்

### 13 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ஆம் இலக்க கிராமச் சங்கங்கள் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13(1) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப் பட்ட அதிகாரங்களின் பலத்தைக்கொண்டு வட பிரதேச உள்ளூராட்சி உதவி அதிகாரி சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்துக் கோப்பாய்க் கிராம சங்கத்தின் 10 ஆம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. தம்பையா சின்னத்துரை, அவருடைய தெரிவின் பின்னர், சங்கத்திற்கு அறிவிக்காமல், சங்கத்தின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதை நிச்சயமாய் அறிந்து யாழ்ப்பாண மாவட்டத்துக் கோப்பாய்க் கிராமச் சங்கத்தின் 10 ஆம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. தம்பையா சின்னத்துரை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து உத்தியோகத்தை விட்டு நீங்கியுள்ளாரென்று இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வடபிரதேசம் (மேல்).

உள்ளூராட்சிக் கந்தோர்,
யாழ்ப்பாணம்,
1966 ம் ஆண்டு தை மீ 3 ந் உ.

2-526—11.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,669

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### 17 (1) ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்து (அத்தியாயம் 257) 17 (1) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, கிழக்குப்பிரதேச மேற்பாக (திருக்கோணமலை), உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நடராசா சிவராசா ஆகிய நான் இதன் அட்டவணையின் முதலாம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையினது முதலாவது கூட்டத்தை அட்டவணையின் இரண்டாம் பத்தியிற் குறிப்பிட்டுள்ள திகதியில், மூன்றும் பத்தியிற் குறிப்பிட்டுள்ள நேரத்தில், நான்காம் பத்தியிற் குறிக்கப்பட்ட இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

ந. சிவராசா,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
(கிழக்குப் பிரதேச மேற்பாகம்).

திருக்கோணமலை,
1966 ம் ஆண்டு பெப்ரவரி மீ 6 ந் உ.

அட்டவணை

| பத்தி 1 கிராமச்சபை | பத்தி 2 திகதி | பத்தி 3 நேரம் | பத்தி 4 இடம் |
|---|---|---|---|
| 1. கிண்ணியா | 21.2.66 | மு.ப. 10.00 | கிண்ணியா பட்டின சபை அலுவலக வளவிலுள்ள கிண்ணியா சனசமூக நிலையக் கட்டிடம் |

2-500—11.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,669

---

# துணை விதிகள்

## பலாங்கொடை நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம், 157 ஆம் பிரிவுகளின் கீழ், பலாங்கொடை நகர சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1965 ம் ஆண்டு டிசம்பர் மீ 4 ந் உ.

### துணைவிதி

1945 மே 25 இன் 9,410 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டபடியான பலாங்கொடை நகர சபையின் துணைவிதிகள், "தேயிலைத் தொழிற்சாலை வைத்தல்" எனும் விடயத்துக்கு உடனடியாகப் பின்னர், கீழ்க்காணும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

"புகையிலை சேகரித்து வைப்பதற்காக அல்லது விற்பதற்காக ஒரு தாபனம் வைத்தல், உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையை சேகரித்து வைப்பதற்கான அல்லது விற்பதற்கான தாபனம் வைத்தல், தச்சு வேலைக்களம் அல்லது தளவாடம் விற்பதற்கான தாபனம் வைத்தல்"

2-213—11.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,669

---

## டெடியோவிற்ற பட்டின சபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ம் பிரிவின் கீழும் 156 ம் பிரிவின் கீழும், டெகியோவிற்ற பட்டின சபையால், ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதி.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜனவரி மீ 29 ந் உ.

### துணைவிதி

#### வாகனங்கட்கும் மிருகங்கட்கும் வரி

சபையால், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணை விதிகளின் XXII ம் பகுதியிலுள்ள 3 ம் துணை விதியின் நோக்கங்களுக்காக வாகனங்கட்குரிய அடையாள அட்சரங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| சைக்கிள் அல்லது முச்சக்கரச் சைக்கிள், அல்லது சைக்கிள் கார் ஒவ்வொன்றிற்கும் .. | දෙ: උ: න: ස: බ |
| இரட்டை மாட்டு வண்டி அல்லது திருக்கல் வண்டி ஒவ்வொன்றிற்கும் .. | දෙ: උ: න: ස: ක |
| ஒற்றை மாட்டு வண்டி அல்லது திருக்கல் வண்டி ஒவ்வொன்றிற்கும் .. .. | දෙ: උ: න: ස: බ: ක |
| கைக்கரத்தை ஒவ்வொன்றிற்கும் .. | දෙ: උ: න: ස: අ: ක |
| றிக்சோ ஒவ்வொன்றிற்கும் .. .. | දෙ: උ: න: ස: රි: ක. |

2-506—11.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,669

## டெகியோவிற்ற பட்டின சபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

256 ம் அத்தியாயமான பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம், 156 ஆம பிரிவுகளின் கீழ், டெகியோவிற்ற பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ்த் தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ம் ஆண்டு ஜனவரி மீ 29 ந உ.

### துணைவிதி

1. பின்வருந் தொழில்கள் அபாயகரமான தொழில்களெனக் கருதப்படும் :—

(1) தேயிலே உற்பத்தி செய்ய ஒரு இடம் வைத்தல்
(2) கொப்பரா உற்பத்தி செய்தல்
(3) தேயிலே இருப்பில் வைத்திருத்தல் (1 அந்தருக்கு மேற்பட)
(3அ) கொப்பரா இருப்பில் வைத்திருத்தல் (10 அந்தருக்கு மேற்பட)
(4) இயந்திர சாதனத்தால் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல்
(5) தேங்காய் எண்ணெய் இருப்பில் வைத்திருத்தல் (50 கலன்கட்கு மேற்பட)
(6) செம்பாருக்கல் எடுக்க அகழ்தல்
(7) பரல்கல் எடுக்க அகழ்தல்
(8) வைக்கோல் இருப்பில் வைத்திருத்தல்.
(9) உலர்த்திய தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்தல்.
(10) காரீயம் இருப்பில் வைத்திருத்தல் அல்லது பதனிடுதல்.
(11) விறகு காலே வைத்தல்.
(12) மண்ணெண்ணெய்க்கடை அல்லது தாங்கி வைத்தல்.
(13) பெட்ரோல், டீசல் எண்ணெய், கடை அல்லது தாங்கி வைத்தல்.
(14) அச்சுக் கந்தோர் வைத்தல்.
(15) ஆபரணம் உற்பத்தி செய்தல்.
(16) அரிசி ஆலே அல்லது நெல்குத்தும் பொறி வைத்தல்.
(17) தும்பு அல்லது தும்புப் பொருள்கள் இருப்பில் வைத்திருத்தல் அல்லது உற்பத்தி செய்தல்.
(18) கம்மாலே வைத்தல்.
(19) தோல் பதனிடும் தொழிற்சாலே வைத்தல்.
(20) மரக்காலே வைத்தல்.
(21) வாயுபானத் தொழிற்சாலே வைத்தல்.
(22) வல்கனேட்டால் ஒட்டும் தொழிற்சாலே வைத்தல்.
(23) தகரவேலேக் கடை வைத்தல்.
(24) வெற்றுச் சாக்கு இருப்பில் வைத்திருத்தல்.
(25) தகட்டு ரப்பர் அல்லது கிரேப் ரப்பர் உற்பத்தி செய்ய ஓர் இடம் வைத்தல்.
(26) தகட்டு ரப்பர் அல்லது கிரேப் ரப்பர் இருப்பில் வைத்திருத்தல்.
(27) ரேடியோப் பெட்டி பழுதுபார்க்கும அல்லது திருத்தும் கடைவைத்தல்.
(28) இலவம் பஞ்சு இருப்பில் வைத்திருத்தல் (5 அந்தருக்கு மேற்பட).
(29) தளவாடக்கடை வைத்தல்.
(30) பீடி உற்பத்தி செய்ய ஒரு இடம் வைத்தல்.
(31) மொட்டார் வாகனங்கள் பழுதுபார்க்க ஒரு இடம் வைத்தல்.
(32) மோட்டார் வாகனங்கள் சுத்தஞ் செய்ய ஒரு இடம் வைத்தல்.
(33) பஸ் வண்டி மேற்கோப்புகள் லொறி மேற் கோப்புகள் உற்பத்தி செய்ய ஒரு இடம் வைத்தல்.
(34) பாட்டரிகட்கு மின்னூட்ட ஒரு இடம் வைத்தல்.
(35) தீப்பெட்டி உற்பத்தி செய்ய ஒரு இடம் வைத்தல்.
(36) அரிசி கறிப் பதார்த்தங்கள் விற்பனே செய்ய ஒரு இடம் வைத்தல்.
(37) இயந்திர சாதனம் மூலம் கருங்கல் உடைக்க ஒரு இடம் வைத்தல்
(38) தச்சு வேலேத் தலம் வைத்தல்.
(39) புகையிலே இருப்பில் வைத்திருத்தல் (10 சிப்பங்கட்கு மேல்).
(40) புகைப்படம் பிடிக்கும் நிலேயம் வைத்தல்.

2. பின்வருவன அருவருப்பூட்டுந் தொழில்களெனக் கருதப்படும் :—

(1) செயற்கை உரம் அல்லது கலவைப்பசளே இருப்பில் வைத்திருத்தல் (10 அந்தருக்கு மேற்பட).
(2) விளூசிரி உற்பத்தி செய்தல்.
(3) சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.
(4) மிருக இரத்தம் அல்லது கழிவு இறைச்சி அவித்தல்.
(5) மிருகத் தோல் இருப்பில் வைத்திருத்தல்.
(6) மீனுக்கு ஐஸ்போடுதல்.
(7) பலகை பதனிடல்.
(8) பாக்குப் பதனிடல்.
(9) தகட்டு ரப்பர் அல்லது கிரேப் ரப்பர் புகையிடல்.
(10) மிளகாய் அல்லது மசாலே அரைக்க ஒரு இடம் வைத்தல்.
(11) கருவாடு இருப்பில் வைத்திருத்தல் (5 அந்தருக்கு மேற்பட).

3. பின்வருந் தொழில்கள் அபாயமும் அருவருப்பும் உள்ளனவெனக் கருதப்படும் :—

(1) பழுதடையத்தக்க பண்டங்கள் இருப்பில் வைத்திருத்தல் (10 அந்தருக்கு மேற்பட்ட).
(2) சிமெந்து இருப்பில் வைத்திருத்தல் (25 அந்தருக்கு மேற்பட)
(3) தும்பு சாயமிடல்.
(4) செங்கல் உற்பத்தி செய்தல் அல்லது இருப்பில் வைத்திருத்தல்
(5) ஓடு உற்பத்தி செய்தல் அல்லது இருப்பில் வைத்திருத்தல்.
(6) சுண்ணம்பு சூளே வைத்தல், இருப்பில் வைத்திருத்தல் அல்லது பதனிடல்.

2-505—11.2.66 ந திகதிய வர்த்தமானி இல. 14,669

---

## டங்கொட்டுவா பட்டின சபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ம் பிரிவின் கீழும் 156 ம் பிரிவின் கீழும், டங்கொட்டுவா பட்டின சபையால் ஆக்கப்பட்டு இக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினல் கீழ் தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதி.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு.
1966 ம் ஆண்டு ஜனவரி மீ 29 ந உ.

### துணைவிதி

#### பொது மார்கெட்

டங்கொட்டுவா பட்டின சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணே விதிகளின் XV ஆம் பகுதியிலுள்ள 1 ஆம் துணே விதியின் நோக்கத்துக்காக " மார்க்கெட் பிரதேசம் " என்பது டங்கொட்டுவ பட்டின சபையின் நிர்வாக எல்லேக்குள் உள்ள பிரதேசமாகவிருத்தல் வேண்டும்.

2-509—11.2.66 ந தேதிய வர்த்தமானி இல. 14,669

## ஹிங்குரகொட பட்டின சபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் ஹிங்குரகொட பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவினுல் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆு ஜனவரி மீ 29 ந் வ.

### துணைவிதிகள்

1. கீழ்க்காணபவை அபாயமான தொழில்களாகக் கருதப்படும்—
   1. வைக்கோல் அல்லது இடுகு சேகரித்து வைத்தல்.
   2. தும்பு அல்லது பருத்திப் பஞ்சு சேகரித்து வைத்தல்.
   3. அச்சியந்திரம் வைத்தல்.
   4. அரிசி ஆலை அல்லது நெற் குத்தும் யந்திரம் வைத்தல்.
   5. விறகுக் கடை வைத்தல்.
   6. வெட்டு மரக்கடை அல்லது தச்சு வேலைக் கொட்டில் வைத்தல்.
   7. வாயுப் பானம் செய்யும் தொழிற்சாலை வைத்தல்.
   8. ஆபரணம் செய்யும் இடம் வைத்தல்.
   9. கம்மாலை வைத்தல்.
   10. இயந்திரத்தால் மிளகாய் அல்லது கறிச்சரக்கு அரைத்தல்.
   11. தீக்குச்சிகள் செய்தல்.
   12. " ஐஸ்கிரீம் " செய்தல்.
   13. மோட்டார் வாகனங்கள் திருத்தும் வேலைக்களம் வைத்தல்.
   14. ரயர்களையும் டியூப்புகளையும் வல்கனைற்றுலொட்டும் தாபனம் வைத்தல்.
   15. நிழற்படக்கலைக்கூடம் வைத்தல்.
   16. சைக்கிள் திருத்தும் தாபனம் வைத்தல்.
   17. சாக்குகள் சேகரித்து வைத்தல்.

கீழ்க்காணபவை அருவருப்பான தொழில்களாகக் கருதப்படும் :—
   1. கருவாடு அல்லது பதனிடப்பட்ட மீன்விற்கும் இடம் வைத்தல்.
   2. மொத்தமாக விற்பதற்காக அழுகக்கூடிய ஆகாரபதார்த்தங்கள் சேகரித்து வைத்தல்.
   3. சவர்க்காரம் செய்தல்.
   4. தோல் சேகரித்துவைத்தல் அல்லது பதனிடல்.
   5. எலும்புகள் சேகரித்துவைத்தல்.
   6. பலகைகள் பதப்படுத்தல்.
   7. பசளை சேகரித்துவைத்தல்
   8. பீடிகள் சுற்றுதல்.
   9. சுருட்டுகள் சுற்றுதல்.
   10. விற்பதற்காக சவப்பெட்டிகள் சேகரித்துவைத்தல்.
   11. விற்பதற்காக மீனுக்கு " ஐஸ் " போடுதல்.

3. கீழ்க்காணபவை அபாயமும் அருவருப்பும் விளைக்கும் தொழில்களாகக் கருதப்படும்—
   1. செங்கல் அல்லது ஓடு சுடுதல்.
   2. சுண்ணும்பு சுடுதல்.
   3. மின்கலவடுக்குகளுக்கு மின்னூட்டல்.

2—510—11.2.66 ந் தேதிய வர்த்தமானி இல. 14,669

# நானுவிதம்

## நிலாவெளிக் கிராமச் சபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்க திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் காண்போரிடமிருந்து 1966 ம் ஆண்டுக்கு லைசன்ஸ் தருமாறு விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்தக் கிராமச் சபை இப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசன்ஸ் கொடுப்பதை மறுக்கவிரும்பினுல் மறுப்புக்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இணைப் பிரதியில் எமக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

### அட்டவணை

| விண்ணப்பக் காரர் பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யப்படும் இடம் | |
|---|---|---|---|
| 1. ப. அப்துல் ரகுமான் | 1 ம் வட்டாம் நிலாவெளி | நிலாவெளி | இறைச்சிக் கடை |
| 2. இஸ்மாயில் அனிபு | 4 ம் வட்டாரம் நிலாவெளி | இரக்கக்கண்டி | இறைச்சிக் கடை |

நா. கனகசபை,
தலைவர்.

கிராமச் சபைக் காரியாலயம்,
நிலாவெளி, 1965 ம் ஆு மார்கழி மீ 29 ந் வ.

2-525—11.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,669

இலங்கை வாஸுமசேனை ஈலரேண பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.